சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – விருதுகள் – 2020–ஆம் ஆண்டிற்கான செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக விருதுகளான வீரமாமுனிவர் விருது மற்றும் தேவநேயப் பாவாணர் விருது வழங்குதல் – விருதாளர்களைத் தெரிவு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(தவ 1.2)த் துறை

அரசாணை (நிலை) எண்.2 — நாள் 04.01.2021

சார்வரி, மார்கழி – 20

திருவள்ளுவராண்டு – 2051

படிக்கப்பட்டது:

1. அரசாணை (ப) எண்.25, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 2.2)த் துறை, நாள் 10.2.2020.

படிக்க:

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.8014/தமிழ்–1/2020, நாள் 03.12.2020
3. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநரின் கடித எண்.670/2020, நாள் 17.12.2020.

******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், வீரமாமுனிவர் விருது மற்றும் தேவநேயப் பாவாணர் விருதினை தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2020–ஆம் ஆண்டிற்கான சித்திரை தமிழ்ப் புத்தாண்டு விருதுகள், 2020–ஆம் ஆண்டிற்கான செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக விருதுகள் மற்றும் 2021–ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் திருநாள் விருதுகள் வழங்க விருதாளர்களை தெரிவு செய்து வழங்குமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. இந்நிலையில், செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக விருதுகளான வீரமாமுனிவர் விருது மற்றும் தேவநேயப் பாவாணர் விருதிற்கான விருதாளர்களை தெரிவு செய்து வழங்குமாறு செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தமிழ் வளர்ச்சி இயக்குநர் மற்றும் செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநரின் கருத்துருவை ஏற்று, 2020–ஆம்

ஆண்டிற்கான செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக விருதுகளான வீரமாமுனிவர் விருது மற்றும் தேவநேயப் பாவாணர் விருதினை கீழே அவ்விருதுகளுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள விருதாளர்களுக்கு வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

| வ .எண் | விருது | விருதாளர் |
|---|---|---|
| 1. | வீரமாமுனிவர் விருது– 2020 | முனைவர் கிரிகோரி ஜேம்சு, ஹாங்காங் |
| 2. | தேவநேயப் பாவாணர் விருது – 2020 | முனைவர் கு. சிவமணி |

5. மேற்கண்ட செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக விருதுகளான வீரமாமுனிவர் விருது மற்றும் தேவநேயப் பாவாணர் ஆகிய விருதுகள் பெறும் விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் விருதுத் தொகையாக ரூ.1,00,000/–மும் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்), 1 சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை, காசோலைப் பேழை, பொன்னாடையும் வழங்கப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்,
சென்னை – 28.
இயக்குநர், தமிழ் வளர்ச்சி இயக்ககம், சென்னை –8.
உரிய விருதாளர்கள்/அமைப்பு (தமிழ் வளர்ச்சி இயக்குநர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை – 9/18.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் செயலாளர் அவர்களின்
முதுநிலை தனிச்செயலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.
04.01.2021

4/1/2021